தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 அக்டோபர் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 126, 127, 128 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

பழையனூருக்கு மருத்துவ மனை

* 129 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பழையனூர் கிராமத்தில் மருத்துவ மனை ஒன்று நடத்த அண்மையில் அனுமதி கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) கேட்கப்பட்ட அனுமதி அந்த மருந்தகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

திருப்புவனம் அரசு மருத்துவ மனை

* 130 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—